# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ    அதி விசேஷமானது

අංක 2398/30 - 2024 අගෝස්තු මස 22 වැනි බ්‍රහස්පතින්දා - 2024.08.22
**2398/30 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 22 ஆந் திகதி வியாழக்கிழமை**

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி I : தொகுதி (I) – பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

நியதிச்சட்டத் தீர்மான இல. 4655.
தனித்துவ இல. MN/09.

**1972 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க காணி சீர்திருத்த சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழான நியதிச் சட்டத் தீர்மானம்**

*10 ஆம் கட்டை, உயிலங்குளம் என்னும் விலாசத்தில் வசித்த லியன ஆராச்சிகே பிர்தோமியஸ் குணதிலக்க என்பவருக்கு சட்டத்தின் 18 ஆம் பிரிவின் கீழான நியதிச்சட்டப் பிரகடனம் ஒன்று வழங்கப்பட்டுள்ளபடியால் சட்டத்தின் 19 ஆம் பிரிவின் கீழ் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு வழங்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் நியதிச்சட்டக் குத்தகை பெறுநரினால் உடைமைகொள்ளப்பட்டுள்ள விவசாய நிலங்களிலிருந்து ஒரு பகுதியை அவர் வைத்துக்கொள்ள வேண்டும் என்று இவ்வாணைக்குழு நியதிச்சட்டத் தீர்மானம் மேற்கொண்டுள்ளது. நியதிச்சட்டக் குத்தகைபெறுநர் வைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட்ட விவசாயக் காணிப் பகுதிகள் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

சட்டத்தரணி பண்டுகாபய ஹர்ஷ கீர்த்தினந்த,
தவிசாளர்,
காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு.

இல.475, கடுவலை வீதி,
பத்தரமுல்லை,
2024, ஓகத்து 07.

*1. வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் தீவு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் புங்கந்தாழ்வு கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமை அதிபதியினால் தயாரிக்கப்பட்ட 168 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் துண்டு 01 என்று விவரிக்கப்பட்ட "புங்கந்தாழ்வுக்காடு" என்று அழைக்கப்படும் காணித்துண்டு. விசாலம் 3 ஏக்கர் 0 றூட் 31 பேர்ச்சஸ் இதுவும் இதனுட்பட்ட மரங்கள், பயிர்கள் சேர்மானங்கள் சகலதும்.*



*இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

*2. வட மாகாணம், மன்னார் மாவட்டம், மன்னார் தீவு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் பரப்பங்கண்டல் சிறிகுளம் கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் தலைமை அதிபதியினால் அளந்து வரையப்பட்ட 168 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் துண்டு 2 என்று விவரிக்கப்பட்ட "பரப்பங்கண்டல்காடு" என்று அழைக்கப்படும் காணித்துண்டு. விசாலம் 2 ஏக்கர் 2 றூட் 35 பேர்ச்சஸ் இதுவும் இதனுட்பட்ட மரங்கள், பயிர்கள் கட்டிடங்கள் சேர்மானங்கள் சகலதும்.*

*3. வட மகாகணம், மன்னார் மாவட்டம், மன்னார் தீவு பிரதேச வருமான உத்தியோகத்தர் பிரிவில் நிலஅளவையாளர் தலைமை அதிபதியினால் அளந்து வரைந்த 168 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் துண்டு 4, துண்டு 7 என்று குறிப்பிடப்பட்ட 'இலுப்பைக்குளத்துக்காணி' 'இலுப்பைக்குளத்துக்காடு ரோட்டடிக்காணி' என்றும் 'காட்டுக்காணி என்றும் அழைக்கப்படும் பள்ளப்பூமி' எனப்படும் காணி. விசாலம் 11 ஏக்கர் 3 றூட் 14 பேர்ச்சஸ் இதுவும் இதனுட்பட்ட மரங்களும், பயிர்களும் கட்டிடங்களும் சேர்மானங்கள் சகலதும்.*

*4. வட மகாகணம், மன்னார் மாவட்டம், மன்னார் தீவு வரதேச வருமான வருமான உத்தியோகத்தர் பிரிவில் நிலஅளவைாளர் தலைமை அதிபதியினால் அளந்து வரைந்த 168 ஆம் இலக்க பூர்வாங்க வரைபடத்தில் துண்டு 9 என்று குறிப்பிடப்பட்ட 'இலுப்பைக்குள வயல்' என்று அழைக்கப்படும் 'இலுப்பைக்குளத்துக்காடு' எனப்படும் காணி. விசாலம் 4 ஏக்கர் 2 றூட் 10 பேர்ச்சஸ் இதுவும் இதனுட்பட்ட மரங்களும், பயிர்களும் கட்டிடங்களும் சேர்மானங்கள் சகலதும்.*

EOG 08-0265

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.*